**ஊழியர் சேம நிதியம்  - 2023**
---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் சேம நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, அங்கத்தவர்களின் உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய தகவல்கள் உள்ளடங்களாக நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஊழியர் சேம நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.ந

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான் பரிசோதிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும் என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு

அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்,

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களுக்கான பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யும் அட்டவணை பிரகாரம், முழுமையாக பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதி தொழில் திணைக்களத்திற்கு மற்றும் இலங்கைக் மத்திய வங்கி ஊழியர் சேம நிதியப் பிரிவிற்குறியதாக முறையே ரூபா 644.89 மில்லியன் மற்றும் ரூபா 167.01 மில்லியன் ஆகும். அச் சொத்துக்களிடையே தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்ற சொத்துக்களை இனங்காண்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 பந்தி பிரகாரம் சொத்துக்களின் பயனுள்ள ஆயட் காலத்தை மீளாய்வு செய்யாததால் ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் சீராக்கவும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களை பொருத்தமானவாறு பராதீனம் செய்ய நடவபடிக்கை எடுத்திருக்கவில்லை. | முழுமையாக பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்களிற்காக கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க பொருத்தமான முறையில் செயற்படுவதற்கு, பயன்படுத்தப்படாத நிலையான சொத்துக்களை எதிர்வரும் ஆண்டில் சரியான முறையில் பராதீனம் செய்யவும் திட்டமிடப்பட்டள்ளது. | இலங்கைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தினால் நடாத்திச் செல்லும் 09 வங்கிக் கணக்குகளிற்குரியதாக 2023 திசெம்பர் 31 திகதி தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2001 முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான கால எல்லையில் காசுப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்ட போதும் வங்கிக் கூற்றில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், வங்கி கூற்றில் பதிவுசெய்யப்பட்ட போதும் காசுப் புத்திகத்தில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், மதிப்பிழந்த காசோலைகள், நேரடி வரவு/செலவுகள், கணனி கணக்கீட்டுத் தொகுதியின் தவறாக 2006 ஆம் ஆண்டு முதல் நிலவும் நிலுவைத் தொகை, வைப்புச் செய்யப்பட்ட போதும் மாற்றப்படாத காசுக் கட்டளைகள் மற்றும காசோலைகள் மற்றும் விநியோகிக்கப்பட்ட போதும் வைப்புச் செய்யாத காசோலைகளான செம்மையாக்கிய பின்னர் தேறிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 4,757.69 மில்லியன் தீர்க்கப்படாத போதும் மீதியாக காணப்படுகிறது. அவற்றில், ரூபா 1,336.98 மில்லியன் தேறிய மீதி 2024 ஏப்ரல் 30 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த தீர்க்கப்படாத தேறிய மீதியினுள் உள்ளடங்கும் ரூபா 273.72 மில்லியன் தொகையானது காசுப் புத்தகத்தில் தீர்க்கப்படாத ரூபா 5,175.11 மில்லியன் கொடுககல் வாங்கல்கள் மற்றும் வங்கி கூற்றில் தீர்க்கப்படாத ரூபா 5,448.83 மில்லியனான கொடுக்கல் வாங்கல்களை ஒன்றுடன் ஒன்றை பதிலீடு செய்து காண்பித்திருந்த பெறுமானமாவதுடன் அந்த மீதிகள் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் மீதிகளாகும். | வங்கிக் கணக்குகள் 4 இற்குரிய பிரச்சினைகளை இனங்கண்டு குறித்த வங்கிக் இணக்கக்கூற்று மற்றும் செம்மையாக்கல் தொடர்பான விபரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இலங்கை வங்கியின் பிரதான கணக்கு ஏனைய அனைத்து கணக்குகளுடனும் ஒன்றோடொன்று தொடர்புபடுவதன் காரணமாக அந்தக் கணக்கில் தீர்ப்பனவு செய்யப்படும் போது ஏனைய 4 வங்கிக் கணக்குகளிலும் மேலும் தீர்ப்பனவுகள் இடம்பெறக்கூடும் என்பதால் குறித்த செம்மையாக்கல்களை 2023 இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க பயன்படுத்தப்படவில்லை. மேலும், 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் இணக்கம் செய்ய முடியாது போன மீதிகளிற்காக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நீண்ட காலமாக நிலவிவரும் இந்த வங்கி கணக்குகளின் கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மோடார் வாகன கிரயம் ரூபா 97.20 மில்லியனும், திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 56.09 மில்லியனும், தேறிய பெறுமானம் ரூபா 41.11 மில்லியனும் ஆனது. அந்த மீதிகள் 2018 ஆம் ஆண்டு முதல் மாற்றமின்றி நிதிக்கூற்றுக்களில் காணப்படுவதால், | மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பீட்டின் மூலம் அவற்றின் தற்போதைய சந்தை பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட்காலத்தை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தின் நிலையான சொத்து பெறுமானத் தேய்வு கொள்கை பிரகாரம் நிலையான சொத்து பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2018 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 41.11 மில்லியனான மோடார் வாகனங்கள் பெறுமானத் தேய்வு கணக்கிடலிற்கு பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மோடார் வாகன கிரயம் ரூபா 97.20 மில்லியனானது. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிதியத்திலிருந்து இதுவரை நிதியளிக்கப்பட்ட 42 வாகனங்கள் காணப்படுவதுடன் அவற்றின் கிரயம் ரூபா 140.58 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி நிலைமை கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மோடார் வாகன கிரயத்திற்கு மற்றும் நிதியத்திலிருந்து நிதியளிக்கப்பட்ட மோடார் வாகன கிரயத்திற்கு இடையே ரூபா 43.38 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களையும் இனங்கண்டு அதன் வாகன சுவீகரிப்பு செலவு விடயத்தின் பிரகாரம் சரியான வாகன எண்ணிக்கையை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க முடியும். ஏற்கனவே வாகனங்களின் உண்மையான பெறுமதியை சிகாஸ் தொகுதியினூடாக இனங்காண இயலுமாவதுடன் முழுப் பதிவேடுகளிலும் இந்த வாகனங்களை இனங்கண்டு சீராக்கத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிய ஏற்பாட்டின் மூலம் நிதியளிக்கப்படும் அனைத்து சொத்துக்களும் நிதியத்தின் நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்க வேண்டும். |
| (ஈ) | 2023 தசெம்பர் 31 திகதியன்று, “மெஹெவர பியச உள்ளக வடிவமைப்பு கட்டமைப்பினை தயாரிக்கும் பூர்த்தி செய்யப்படாத வேலைகள்” கணக்கில் உள்ள ரூபா 297.89 மில்லியன் மீதியை அலுவலக பொருத்துக்களாக மூலதனமாக்கி பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்ய வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | பூர்த்தியாகாத வேலைக் கணக்கை பரீட்சித்து உண்மையான நிலையான சொத்துக்களை எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு இயலுமான நிலைக்கு வந்த திகதி முதல் மூலதனமாக்கப்பட்டு பெறுமானத் தேய்வு கணக்கிட வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 29 திகதியன்று தொழிலாளர் பொது செயலகத்தின் முதலாம் மாடியில் உட்புறக் நிர்மாணத்திற்காக ரூபா 24.56 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதியை மூலதனமாக்குவதற்குப் பதிலாக கட்டிட மேம்பாட்டுச் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உண்மையான நிலையான சொத்துக்களை இனங்கண்டு எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதனம் மற்றும் வருமான செலவுகளை தெளிவாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களைள் தயாரிக்க வேண்டும் |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூ. மில்லியன்) | நேரொத்த அறிக்கையின் பிரகார பெறுமதி (ரூ. மில்லியன்) | வேறுபாடு (ரூ.மில்லியன்) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| அங்கத்துவ கணக்கு மீதிகளில் உள்ளடங்கும் துணை கணக்கு 5 இனது மீதிகள் | 94,633 | 78,693 | 15,940 | தனிப்பட்ட கணக்குகள் காசு அடிப்படையில் பேணப்பட்டு வருவதுடன் பொதுப் பேரேட்டில் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடப்படுவது அட்டுறு அடிப்படையிலாகும். இதனால் இந்த இரண்டு தொகுதிகளிலும் ஏதேனும் தினத்தில் காணப்படும் மீதிகளில் இயற்கையாகவே வேறுபாடு காணப்படுகின்றது. இரு தொகுதிகளிலும் அங்கத்துவ கணக்கு மீதிகளில் இடம்பெறும் அன்றாட கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடலை உறுதி செய்வதற்காக அன்றாடம் இவ்விரண்டு தொகுதிகளினதும் கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டுள்ளது. | வேறுபாட்டிற்கு இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.4. கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை (ரூ. மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 1,154.03 | குறியீட்டு இலக்கம், கொள்வனவுத் திகதி, நிலையான சொத்து கிரயம் மற்றும் சொத்து நிறுவப்பட்ட இடம் போன்ற அடிப்படைத் தகவல்களை உள்ளடக்கிய சொத்துக்கள் பதிவேடு | அனைத்து நிலையான சொத்துகளுடன் கூடிய பதிவேடொன்று இல்லாததுடன் 2016 முதல் நிதியத்தின் கீழ் கொள்வனவு செய்த சொத்துக்கள், வகை பிரகாரம் சிகாஸ் மென்பொருளில் உள்ளடக்கி ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. | நிதியத்தின் சொத்துக்கள் தொடர்பாக முறையான பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | தொழில் திணைக்களத்தின் சுற்றறிக்கை | | | |
| (i) | 1999 பெப்ரவரி 11 ஆம் திகதிய 01/99 | 2018 முதல் 2023 வரையான வருடங்களிற்காக நிறுவன பரீட்சிப்பு நடவடிக்கைகளை | அறவிடுவதற்காக கொண்டுவரப்படும் D66 C அல்லது | பங்களிப்புத் தொகை மற்றும் மிகை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க சுற்றறிக்கை | மேற்கொண்டு கூட்டுத் தொகை ரூபா 103 மில்லியன் மிகை அறவீடு மற்றும் பங்களிப்புத் தொகையை அறவிடும் முதலாவது அறிவிப்பை வெளியிட 22 நாட்கள் முதல் 1438 நாட்கள் வரையான காலம் கடந்துள்ள 70 சந்தர்ப்பங்கள் கம்பஹ மாவட்ட தொழில் அலுவலகம் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டன. மேலும் 05 சந்தர்ப்பங்களிற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 13.46 மில்லியனை அறவிட இறுதி அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கவில்லை வட கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட தொழிலாளர் அலுவலகங்களிற்கு உரியதாக 2020 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலப்பகுதியில் பங்களிப்பு மற்றும் மிகை அறவிடாக முறையே 61 நிறுவனங்கள், 16 நிறுவனங்கள் மற்றும் 8 நிறுவனங்கள் தொடர்பாக ரூபா 52.73 மில்லியன், ரூபா ரூபா 95.22 மில்லியன் மற்றும் ரூபா 7.96 மில்லியன் அறவிட வேண்டி இருந்தன. | அறிக்கைகளை தரவுத் தொகுதிக்கு உள்ளிட்ட பின்னர் அவதானிக்கப்படும் குறைபாடுகளை சரிசெய்ய காலமொன்று எடுத்தல், கணனிகள் செயலற்றுப் போதல், ஊழியர்களினால் தவணை நிவாரணம் கோருதல், குறித்த கணக்கிடல்களை திருத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் உள்ளமை, நிறுவன முகவரியை கைவிட்டுள்ளமை, நிறுவனம் மூடப்பட்டுள்ளமை, ஊழியர்களை கண்டறிய முடியாமை போன்ற காரணங்களால் தாமதம் ஏற்பட்டுள்ளது. | அறவீடுகளை அறவிட கட்டளைகளை தாமதமின்றி அனுப்புவதன் மூலம் அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும். |
| (ii) | 2000 பெப்ரவரி 10 திகதிய இலக்கம் 6/2000 கொண்ட சுற்றறிக்கையின் 1(IV) பிரிவு | 2023 செப்டம்பர் 11 திகதியன்று நிதியத்தின் கண்கானிப்பு தரவு தொகுதியன் பிரகாரம் கம்பஹா மாவட்ட தொழிலாளர் அலுவலத்திற்கு உரியதாக 4835 பதிவுசெய்யப்பட்ட செயற்படும் நிறுவனங்கள் மற்றும் 411 செயலற்ற/ மூடப்பட்ட நிறுவனங்களும் ஆனது. நிறுவனங்களை பரீட்சிப்பு செய்யும் போது நீண்ட காலமாக பரீட்சிக்கப்படாத நிறுவனங்களை பரீட்சிப்பிற்கு தெரிவு செய்ய வேண்டுமென சுற்றறிக்கை மூலம் | தொழிலாளர் அலுவலர்கள் வாரத்தில் 03 நாட்கள் கள நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் ஒரு மாதத்தில் சுமார் 20 நிறுவனங்கள் ஒரு அலுவலரினால் பரிசோதிக்கப்படுகின்றது. மேலும், உதவி தொழிலாளர் ஆணையாளினால் அனைத்து தொழிலாளர் அலுவலரினதும் பரீட்சிக்க வேண்டிய நிறுவனங்களின் பட்டியலிற்கு 05 | நீண்ட காலமாக பரீட்சிக்கப்படாத நிறுவனங்கள் தொடர்பாக பரீட்சிப்பொன்றை மேற்கொள்ளவும் உப வலயங்களிற்கு ஒதுக்கப்படாத நிறுவனங்களை உப வலயங்களிற்கு ஒதுக்கி பரீட்சிப்பொன்றை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிவுறை வழங்கப்பட்டுள்ள போதும் குறிப்பிட நிறுவனங்களிற்கு இடையே 84 சதவீதம் 2018 ஆண்டு முதல் 2023 செப்டம்பர் 11 திகதி வரையிலான காலப் பகுதியில் பரீட்சிக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், கம்பஹா வலயத்திற்குரிய பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் 8,483 நிறுவனங்கள் உப வலயங்களிற்கு பிரிக்கப்பட்டு இருக்காததால் அந்த நிறுவனங்கள் தொடர்பில் கண்காணிப்பு செய்யப்படுவதில்லை என அவதானிக்கப்பட்டது. | செயலற்ற நிறுவனங்கள் உட்படுத்தப்படுகின்றன. | |
| (ஆ) | 1958 இன் 15 இலக்க ஊழியர் சேம நிதியத்தின் 15 பிரிவு | ஏதேனும் ஒரு நிறுவனத்தின் ஊழியர்களிற்குரிய பங்களிப்புத் தொகை ஒவ்வொறு மாதமும் முடிவடைந்து எதிர்வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய போதும், வட கொழும்பு மற்றும் கம்பஹ மாவட்ட தொழிலாளர் அலுவலக அதிகார பிரதேசத்திற்குரிய 2022 ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் முறையே 89 மற்றும் 109 இலிருந்து 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் பதிவு செய்த திகதி முதல் குறித் பங்களிப்புத் தொகையை செலுத்தி இருககாத போதும் அது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து பங்களப்புத் தொகை செலுத்தியிருக்காத நிறுனங்களை இனங்கண்டு தொழிலாளர் அலுவலர்கள் மூலம் பின்தொடர் நடவடிக்கை செய்வதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பின்தொடர் செயற்பாடுகளை முறையாக நடாத்த வேண்டும். |
| (இ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 | பெறுகைகள் செயன்முறையில் பதிவு செய்துள்ள வழங்குனர்கள் அல்லது தொலைபேசி பெயர்பட்டியலில் மஞ்சல் நிற பக்கங்களில் மற்றும் ரேன்போ பக்கங்களில் பதிவு செய்துள்ள வழங்குனர்களை தெரிவு செய்து விலைமனு கோர வேண்டிய போதும், மீளாய்வாண்டினுள் கூட்டுத் | இந்த வழங்குனர்கள் குறித்த பெறுகைகள் தொடர்பில் நீண்ட காலமாக ஈடுபட்டுள்ள வழங்குனர்கள் ஆகையால் விலைமனு கோரும் சந்தர்ப்பத்தில் ரேன்போ பக்கங்களில் பதிவு செய்துள்ளதாக உறுதியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பதென. | பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க வெளிப்படைத் தன்மையுடன் பெறுகைகளை மேற்கொள்ள வேண்டும். |

தொகை ரூபா 27.89 மில்லியனான கணனிகள், கெமராக்கள் மற்றும் அச்சுப் பொறிகளை கொள்வனவு செய்கையில் விலைமனு கோருவதற்காக வழங்குனர்களை தெரிவு செய்த முறைமையை வெளிப்படுத்தி இருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் விளைவுகள் ரூபா 467,193 மில்லியனான இலாபமாவதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 313,934 மில்லியன் ஆகும். அதன் பிராகாரம் செயற்பாட்டுப் விளைவுகளில் ரூபா 153,259 மில்லியனான வளர்ச்சியை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. நிதியத்தின் வட்டி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 93,150 மில்லியனால் வளர்ச்சியும் நிதி உபகரணங்களின் நியாயமான பெறுமதி சரிசெய்தல் ஊடாக ரூபா 23,836 மில்லயனான இலாபத்தை இனங்கண்டதும் இந்த வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டியலிடப்படாத கம்பனிகளில் பங்கு முதலீட்டில் ரூபா 5,000 மில்லியன் அதாவது 52 சதவீதம் 2013 ஆண்டு தனியார் கம்பனியொன்றில் முதலீடு செய்திருந்ததுடன் அந்த கம்பனியின் கீழ் செயற்படுத்த இருந்த கிரேண்ட் ஹயட் கொழுப்பு கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2021 திசெம்பர் 27 திகதியளவில் பூர்த்தி செய்ய வேண்டிய போதும் அந்த கருத்திட்டத்தை செயல்படுத்த முடியாதென குறித்த கம்பனியினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு பிரிவினால் இக் கம்பனியை விற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே, மேற்குறித்த நிறுவனத்தில் முதலீடு செய்து 11 ஆண்டுகள் கடந்துள்ள போதும் முதலீட்டின் மூலம் நிதியத்திற்கு எவ்வித நலன்களும் கிடைத்திருக்கவில்லை. | குறித்த நிறுவனம் அரச நிறுவனமொன்றான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கீழுள்ள துணைக் (Subsidiary) கம்பனி ஒன்றாவதுடன் அதனை விற்பதற்காக அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அறிக்கையிடப்படுகின்றது. அதன் பிரகாரம், நிதி, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு பிரிவினால் அந்த நிறுவனத்தை விற்பனை செய்வதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து வருகிறது. | ஆபத்து குறைவான சிறந்த முதலீடுகள் செய்யப்பட வேண்டியதுடன் முதலீடு செய்யப்பட்ட தொகையை மீள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியளவில் பட்டியலிடப்பட்ட 15 கம்பனிகளில் செய்திருந்த ரூபா 17,401.39 மில்லியனான சாதாரண பங்கு முதலீடுகளிற்காக மீளாய்வாண்டில், பட்டியலிடப்பட்ட 09 கம்பனிகளில் செய்திருந்த ரூபா 4,390.49 | 2019-2022 காலப்பகுதியில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக இந்த நிறுவனங்களினால் அந்த ஆண்டுகளில் இலாபப் பங்கை அறிவிக்கவில்லை. இந்த கம்பனிகளின் செயல்பாடுகள் | அங்கத்துவத்திற்கு அதிக நலன்களை வழங்க இயலுமானவாறு சிறந்த முதலீட்டுகளை மேற்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனான சாதாரண பங்கு முதலீடுகளிற்காக 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் நிதியத்திற்கு நலன்கள் கிடைத்திருக்கவில்லை. | 2023 ஆண்டில் வளர்ச்சியடைற்துள்ளதுடன், அதன் மூலம் சிறியளவில் இலாபம் ஈட்டுதல் அறிக்கையிடல் அல்லது குறைந்தபட்ட இலாபகரமான நிலைமைகளை அறிக்கையிட ஆரம்பித்துள்ளது. அதன் பிரகாரம், அந்த கம்பனிகளிற்கு எதிர்காலத்தில் இலாபப் பங்கை அறிவிக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஊழியர் சேம நிதியத்தில் பதிவு செய்யாது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் மாத்திரம் பதிவு செய்திருந்த தொழில் தருனர்களின் எண்ணிக்கை 2023 திசெம்பர் 31 திகதியளவில் 28,994 ஆனதுடன் அந்த ஊழியர்களின் தினத்தன்றே ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு கிடைத்திருந்த பங்களிப்புத் தொகையின் கூட்டுத் தொகை ரூபா 401.25 மில்லியனானது. அதன் பிரகாரம், அந்த ஊழியர்களிடையே நிதியத்தில் பதிவு செய்ய வேண்டிய போதும் பதிவினை புரக்கணித்துள்ள தொழில் தருனர்களை இனங்கண்டு நிதியில் பதிவு செய்வதற்கு சபையுடன் ஒருங்கிணைந்து பொருத்தமான வேலைத் திட்டமொன்றை தயாரித்திருக்கல்லை. | ஊழியர் சேம நிதிய சட்டத்தின் கீழ் காப்புத் செய்யப்படும் தொழில் தருனர்களை இனங்கண்டு அவர்களின் நிறுவனங்கள் அமைந்துள்ள பிரதேசத்திற்கு பொறுப்பான தொழிலாளர் அலுவலர்களைக் கொண்டு அந்த தொழில் தருனர்களை ஊழியர் சேம நிதியத்திற்கு பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதென. | இரண்டு நிறுவனங்களுக்கிடையே சிறந்த ஒருங்கிணைப்பின் மூலம் சட்டத்தின் பிரகாரம் நிதியத்தில் பதிவு செய்ய வேண்டிய நிறுவனங்களை பதிவு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நிதியத்தின் வங்கி இணக்கக் கூற்றுக்களில் 2001 ஆண்டிலிருந்து நிலவிவரும் இணங்காத வங்கிக் கணக்குகளை தீர்ப்பதற்கு 2020 சனவரி 09 திகதி தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை திகதியிலிருந்து 08 வாரங்களுக்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது, குறித்த கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் இவ்வறிக்கை திகதியளவிலும் அடையப் பெற்றிருக்கவில்லை. இருப்பினும் 2020 திசெம்பர் 31 திகதி வரை உடன்படிக்கை தொகையின் 50 சதவீதம் அதாவது ரூபா 1.56 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த நிறுவனத்தின் இடைக்கால அறிக்கையொன்று 2020 ஒக்டோபர் 30 திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் பிரதான வங்கிக் கணக்கினை தீர்க்கும் நடவடிக்கைகள் முடிவிக்கப்படாததால் குறித்த செம்மையாக்கல் 2023 இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க பயன்படுத்தப்பட்டது. | உடன்படிக்கை பிரகாரம் நடவபடிக்கை எடுத்து பிரதான வங்கிக் கணக்கில் காணப்படும் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதி நிதியத்தின் அங்கத்தவர் கணக்கினுள் ”தொழிலாளர் ஆணையளர் நாயகம்” எனும் பெயரில் உள்ள கணக்கில் தொழில் தருனர்களிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அறவிட்டு இலங்கை மதிதிய வங்கியில் நிறுத்தி வைத்துள்ள ரூபா 12,237 மில்லியனான தொகையை, தொழிலாளர் திணைக்களத்தின் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிரந்த ரூபா 440 மில்லியன் தொகையை, “ நடைமுறை ஆண்டின் பங்களிப்பு தொகை இலக்கம் 01” என்ற கணக்கில் நிலவிய ரூபா 78,797 மில்லியனான மீதியை, பல்வேறு காரணங்களால் அங்கத்தவர்களிற்கு செலுத்தாத நிறுத்தி வைத்த நலன்கள் மற்றும் உரிமை கோரப்படாத நலன்களாக காணப்படும் ரூபா 1,009 மில்லியன் மீதியை, பற்றாக்குறை/மிகை பங்களிப்பு தொகையாக காணப்படும் ரூபா 2,590 மில்லியன் மீதியை மற்றும் பற்றாக்குறை/மிகை நலன்கள் செலுத்தலாக காணப்படும் ரூபா ரூபா 552 மில்லியன் மீதிகளை கிடைக்க வேண்டிய அங்கத்தவர்களை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேற்குறித்த அங்கத்துவ கணக்குகளிற்கு செலுவு வைக்கப்படாது காணப்படும் கணக்குகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு 2013, 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் பொதுக் கணக்குக் மீதான செயற்குழுவினாலும் கட்டளை இடப்பட்டிருந்தது. | ‘‘சீ” அறிக்கை இன்றி அனுப்பப்பட்ட பங்களிப்புத் தொகைகளை போன்றே முழுமையாக அல்லது முரண்பாடான ‘‘சீ” அறிக்கையுடன் அனுப்பப்பட்ட பங்களிப்புத் தொகை காணப்படுகின்றமை போன்ற பல்வேறு காரணங்களால் இந்த மீதிகளை தனிப்பட்ட கணக்குகளில் செலவு வைப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.<br>இந்த மீதிகளை தீர்ப்பதற்காக, அங்கத்தவர் பெயர்கள் மற்றும் இலக்க முரண்பாடுகளுடன் கூடிய பங்களிப்புத் தொகை விபர அறிக்கைகள் தொடர்பில் ஊழியர்களை அறிவுருத்துதல், பிழையான ‘‘சீ” அறிக்கைக்காக மொத்த தொகையின் மீது 2% மிகை அறவீடு விதித்தல், நிகழ்நிலை முறை ஊடாக நிதி விவர அறிக்கைகளைச் சேகரித்தல், தன்னியக்க அங்கத்தவர் கணக்கை இற்றைப்படுத்தும் முறைமையொன்றை அறிமுகப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தீர்க்க முடியாத பங்களிப்புத் தொகையை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | களுத்துறை மாவட்ட தொழிலாளர் அலுவலக அதிகார பிரதேசத்திற்குரிய தொழில்தருனர் நிறுவனம் ஒன்றினால் 2019 ஒக்டோபர் முதல் 2022 ஏப்ரல் வரையிலான காலப்பகுதிக்கான பங்களிப்புத் தொகையை செலுத்தாத காரணத்தினால் ரூபா 3.27 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இத்தொகையை 32 தவணைகளில் செலுத்த 2022 திசெம்பர் 30 அன்று அங்கீகாரம் வழங்கியிருந்த போதும் 2024 ஜூன் 30 திகதி வரை அவற்றில் நான்கு தவணைகள அதாவது ரூபா 510,000 மாத்திரம் நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய ரூபா 2.76 மில்லியன் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியாகவுள்ள நிலுவை தவணைகளை விரைவில் அறவிட முன்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென. | பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலுவை தவணைகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | களுத்துறை மாவட்ட தொழிலாளர் அலுவலக அதிகார பிரதேசத்திற்குரிய தொழில்தருனர் நிறுவனம் ஒன்றினால் 2011 சனவரி முதல் 2020 திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்கான பங்களிப்புத் தொகையை செலுத்தாத காரணத்தினால் விசாரிக்கப்பட்ட வழக்கு தீர்ப்பின் பிரகாரம் ரூபா 5.89 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரை 7 அங்கத்தவர்களிற்கு வழங்க வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 1.14 மில்லியன் தொகை வழங்கி இருக்கவில்லை. | அங்கத்தவர் பெயர் மற்றும் இலக்கங்களில் உள்ள பிழைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் திருத்தப்பட வேண்டியதால் அது தொடர்பாக நிறுவனத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவல் கிடைத்தவுடனே திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த அங்கத்தவர்களுக்கு பணம் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | தொழில் வழங்குனர்களிற்கு எதிரான வழக்கு தாக்கல் செய்து அறவிட்ட தொகைகள் தீர்க்கப்படும் வரை பொது வைப்புக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்படுவதுடன் 2023 திசெம்பர் 31 திகதி அதன் மீதி ரூபா 440.36 மில்லியன் ஆகும். அவற்றில் ரூபா 87.06 மில்லியன் தொகை 2009 ஆண்டிற்கும் 2022 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் அறவிடப்பட்ட தொகையாகும். இத் தொகையை பெறவேண்டிய அங்கத்தவர்களை இனங்கண்டு அந்த அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளிற்கு செலவு வைப்பதற்காக் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படாத காரணத்தால் அந்த பண முதலீட்டின் மூலம் ஈட்டக்கூடியதாக இருந்த முதலீட்டு வருமானம் அங்கத்தவர்களிற்கு இழக்கப்பட்டிருந்தது. | ஊழியர் சேம நிதிய வைப்புக்களில் பல்வேறு வழிகளில் வழக்குகள் மூலம் அறவிடப்படும் தவணைகளாக திரட்டப்படும் பணம் உள்ளடங்கியுள்ளதுடன் முழுத் தொகையும் திரலும் வரை கொடுப்பனவு செய்ய முடியாமை, வைப்புத் தொகை உரிமையாளர்கள் வெளிநாடு செல்லுதல், ஆரம்ப உரிமையாளர்களின் மரணம் காரணமாக உரிமையாளர்கள் முன்வரும் வரை காத்திருத்தல் போன்ற காரணங்களால் இந்தப் பணத்தை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | குறித்த அங்கத்தவர்களின் உரிமையை உறுதிப்படுத்தவும் அந்த உரிமைகளின் மீது அங்கத்தவர்களிற்கு சிறந்த நலன்களை வழங்கவும் ஏற்பாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 31 திகதி வரை நிதியத்தினால் ரூபா 12,755.09 மில்லியனை அறவிட வெளி நிறுவனங்களிற்கு எதிராக 14,096 வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தது. அவற்றில் கூட்டுத் தொகை ரூபா 2,420 மில்லியனை அறவிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட 4,381 வழக்குகள் செயலற்ற நிலையிலும், கூட்டுத் தொகை ரூபா 1,232 மில்லியனை அறவிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட 2,138 வழக்குகள் திறந்த பிடியாணை நிலையிலும் காணப்பட்டன. மேலும், வெளி நிறுவனங்களால் நிதியத்திற்கு எதிராக மொத்த பெறுமதி ரூபா 201.3 மில்லியன் கோரி நீதிமன்றத்தில் 62 வழக்குகளை தாக்கல் செய்திருந்தன. | மீளாய்வாண்டு இறுதியில், ரூபா 12,755.09 மில்லியனை அறவிடுவதற்காக நிதியினால வெளி நிறுவனங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 14,096 ஆன போதும், வெளி நிறுவனங்களால் நிதியத்திற்கு எதிராக மொத்த பெறுமதி ரூபா 201.3 மில்லியன் கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 62 ஆனது. இந்த 62 வழக்குகளில் 32 வழக்குகள் 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஒரு தனியார் நிறுவனத்தால் நிதியத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தன. | தேவையான ஏற்பாடுகளை செய்து நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2024 மே 08 திகதிக்கு அங்கத்தவர்களால் நலன்களை பெற்றுக் கொள்வதற்காக நிதியத்திற்கு சமர்ப்பித்த விண்ணப்பங்களிற்கு அந்த திகதி வரை நலன்கள் வெளியிடப்படாத மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | அங்கத்தவர்களை இனங்காண முடியாத கோவைகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை, மூடப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக காணப்படும் | தாமதங்களை தவிர்த்து அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவையை |

| | | | |
|---|---|---|---|
| | 5,559 ஆகும். அந்த விண்ணப்பங்களில் 1344 விண்ணப்பங்கள் 2012 முதல் 2023 வரையிலான ஆண்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களாவதுடன் அவற்றில் 463 விண்ணப்பங்கள் தரவு தொகுதிக்கு மாத்திரம் உள்ளிடப்பட்டு முன்நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் காணப்பட்டன. மேலும், 81 மற்றும் 172 விண்ணப்பங்கள் முறையே நலன்களை செலுத்துவதற்காக அதிகாரமளித்தல் (Claims for Authorization) மற்றும் அங்கீகாரத்தல் (Claims for Approval) ஆகிய கட்டங்களில் காணப்பட்டன. நலன்களை விடுவிக்கும் செயற்பாடுகளுக்கு நீண்ட காலம் எடுக்கப்படுவதன் காரணமாக நிதியத்தை விடுவிப்பது தாமதமாவதன ஊடாக அவர்களிற்கு பாதகமான நிலைமை ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது. | பிரச்சினைகள், போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை, வழக்கு தாக்கல் செய்தல் மற்றும் விசாரணைகளுக்கு அனுப்பப்பட்ட கோப்புகள் காணப்படல், போன்ற பல்வேறு காரணிகளால் விண்ணப்பங்களிற்கான நலன்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதென. | வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | முதலீடுகளுக்காக கொடுப்பனவு தீர்வு கட்டுப்பாட்டு கணக்கில் (Investment Clearing Account) 2016 ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 8.2 மில்லியனும், தொத்துக்கள் பராதீனக் கணக்கில் நிலவிய 2023 ஆண்டில் சொத்துக்கள் பராதீனத்தின் போது கிடைத்த ரூபா 2.79 மில்லியனுமாக கூட்டுத் தொகை 10.99 மில்லியன் தீர்க்கப்படாது “ ஏனைய செலுத்த வேண்டிய செலவுகள்” என நிதிநிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த மீதிகளை 2024 ஆண்டில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்க்கப்படாத மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மெஹெவர பியச கட்டிடத்தில் 2023 ஒக்டோபர் மாதத்திற்காக வசதிகள் முகாமைத்துவம் மற்றும் சேவைக் கட்டணங்கள் மற்றும் உள்ளக சுத்திகரிப்பிற்காக சேவைகளை வழங்கும் நிறுவனத்தினால் ரூபா 6.55 மில்லியன் பட்டியலை சமர்ப்பித்திருந்ததுடன், அதனை கட்டிடத்தில் அமைந்துள்ள அனைத்து நிறுவனங்களிற்கும் பிரிக்கப்படாது மொத்தத் தொகையையும் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வருடாந்த ஏற்பாட்டினை பயன்படுத்தி செலுத்தியதன் மூலம் ஏற்பட்ட நிலைமையென அவதானிக்கப்படுகிறது. | ஒவ்வொரு நிறுவனத்துடனும் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொதுவான செலவினங்கள் பகிரப்பட வேண்டும். |

**3.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் அங்கத்தவர்களை மீள்பதிவு செய்யும் கருத்திட்டத்திற்காக கூட்டுத் தொகை ரூபா 27.89 ஆன 60 கணனிகள், 60 கெமராக்கள் மற்றும் 60 அச்சுப் பொறிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேற்குறித்த 60 கணனிகளில் முதல் 30 கணனிகளை கொள்வனவு செய்ய பயன்படுத்திய ‘‘நினைவக கொள்திறன்’’ விவரக்குறிப்பு மாற்றப்பட்டு கடைசி 30 கணனிகளை கொள்வனவு செய்ய விலைகள் கோரப்பட்டிருந்ததுடன் இரண்டாம் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்த விவரக்குறிப்பு மேற்குறித்த கருத்திட்டத்திற்காக போதுமானதென கோப்புகளினூடாக உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் முதலாம் சந்தர்ப்பத்தில் ஒரு அலகு ரூபா 335,328 இற்கும், இரண்டாவது சந்தர்ப்பத்தில் ஒரு அலகு ரூபா 141,400 இற்கும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததால் ஒரு அலகிற்கு சுமாராக ரூபா 193,928 தொகை வீதம் ரூபா 5.82 மில்லியனை சேமிக்கும் இயலுமை முதலாம் சந்திர்ப்பத்தில் இழக்கச் செய்யப்பட்டிருந்தது. மேலும், 2022 ஜுன் 01 திகதி இக் கருத்திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்த போதும், 51 கணனிகள், 53 கெமராக்கள் மற்றும் 50 அச்சுப் பொறிகள் 2024 மார்ச் 14 வரை விநியோகிக்கப்படாது களஞ்சியத்தில் இருந்த காரணத்தால் மேற்கொள்ளப்பட்ட செலவினால் எதிர்பார்த்த விளைவுகளை அடைந்து கொண்டிருக்கவில்லை. | சட்ட திருத்தங்களின் பிரகாரம் புதிய அங்கத்தவர்களை இலத்திரனியல் வழிமுறை ஊடாக பதிவு செய்ய முடியுமான கொள்ளளவுடன் கூடிய கணனிகளிற்கு கவனம் செலுத்தி விவரக்குறிப்பு தயாரிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஆரம்ப 30 கணனிகள் அந்த விவரக்குறிப்பின் பிரகாரம் கொய்வனவு செய்யப்பட்டது. அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்களின் பிரகாரம் செயல்படுத்த திட்டமிடப்பட்ட Electronic National Identity Card Project – e NIC கருத்திட்டம் காரணமாக தனித்தனி கைரேகைகள் பெற வேண்டிய தேவைப்பாடு இல்லையென தொழிலாளர் ஆணையாளர் நாயகம் முடிவு செய்ததால் அந்த கைரேகைகளைப் பெறுவதற்குத் தேவையான விவரக்குறிப்புக்களை அகற்றி கணனிகளிற்காக மீண்டும் விவரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டன | பெறுகைகளை சிறப்பாக திட்டமிட வேண்டியமை மற்றும் சமூக நிதியத்திலிருந்து செலவு செய்யும் போது ஆக்கபூர்வமாக நிதியம் பயன்படுத்தப்பட வேண்டும். |